ஸ்ரீ

# லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - ௧௦.] துர்முகி௵ ஆடி௴. [எண் - ௭.

## வேதாகமப் பிரகரணம்.

சுக்கில யஜுர்வேத சம்பந்தமான
சுதரிசனோபநிடதம்.

పూర్ణమద ఇతి శాంతిః.

యజ్ఞోపవీతీ కృతచక్రధారీ యోబ్రహ్మ విద్బ్రహ్మ విదోమ
నీషా ।
సహిరణ్య మాదాయ సుదర్శనఞ్చ కృత్వాతద్వహ్ని
చిహ్నం స్వయముపైతి యుక్తమ్ ।

பூணூல்தரித்தும், சக்கரதாரணம் பண்ணியும், பிரம்மவித்தாயும் யாவருண்டோ, அப்படிப்பட்ட பிரம்மஞானிபாலே பொன்னினும் சக்கரத்தைச்சமைத்து, அதை அக்கினிதப்த மாக்கித் தரிப்பது யுக்தமாம்.

స్త్రీశూద్రాః సంబాహుభ్యాం ధారయేత్ ।
తస్మాద్గర్భే * నజాయతే । బ్రాహ్మణస్య శరీరం జాయతే ।
శ్రీవిష్ణుం భజన్తి ।

ஸ்திரீ சூத்திரர்கள் புஜங்களில் சக்கரத்தைத் தரிக்கவேண்டும். அதினால் கர்ப்பத்தில் பிறப்பதில்லை. எவர்களானல் சக்கரத்தைத்தரித்துவிஷ்ணுவைப் பஜிக்கின்றார்களோ, அவர்களுடைய சரீரம் பிராம்மணசரீரமாகின்றது.

నాసాదికేశ పర్యన్త మూర్ధ్వపుణ్డ్రం ధారయేత్ ।
ఉద్ధృతాసి వరాహేణ కృష్ణేన శతబాహునా ।
మృత్తికేహన మేపాపం యన్మయా దుష్కృతం కృతమ్ ॥

மூக்குமுதல் தலைமயிர்வரையில் ஊர்த்துவ புண்டரத்தைத் தரிக்கவேண்டும். நூறுபுஜங்களுடைய விஷ்ணுவாலே மேலேயெடுக்கப்பட்ட மிருத்திகையே! என்னாலேசெய்யப்பட்ட பாபத்தை நாசஞ்செய்யவேண்டும்.

త్వయాహతేన పాపేన జీవామి శరదశ్శతమ్ ।
మృత్తికేదేహిమేపుష్టిం త్వయిసర్వం ప్రతిష్ఠితమ్ ॥
తస్మాద్ద్విరేఖం భవతి । తం దేవకీపుత్రం సమాశ్రితః ।

உன்னாலே நசிக்கப்பட்ட பாபமுடையவனாய் நூறுவருஷம் ஜீவிக்கிறேன். மிருத்திகையே! உன்னிடத்தில் எல்லாமிருக்கின்ற தாகையாலே எனக்குப் புஷ்டியைக் கொடுக்கவேண்டும். தேவகீ புத்திரனான விஷ்ணுவை ஆசிரயித்தவன் இரண்டு ரேகைகளுடைய ஊர்த்துவ புண்டரத்தைத் தரிக்கக்கடவன்.

అగ్నినావైహోత్రా చక్రం పాఞ్చజన్యం
ప్రతప్తం ద్విభుజౌ ధార్యేతే । ఆత్మకృతం చరేత్ ।

அக்கினியினாலே தப்தமான சக்கரத்தையும் சங்கத்தையும் இரண்டுபுஜங்களில் தரிக்கவேண்டும். தன்னுடைய கர்மாநுஷ்டானத்தையும் பண்ணவேண்டும்.

ఆచార్యస్య సమ్ముఖం ప్రపద్యేత్తస్మాద్వైకుణ్ఠం ।
నపురాగమనం సాలోక్య సారూప్య సామీప్య సాయుజ్యం
గచ్ఛతి ।
సాయుజ్యంగచ్ఛతీతి । యఏవంవేదేత్యుపనిషత్ ॥

எவனானல் இப்படி யறிகிறானே அவன் ஆசாரியனுடைய சந்நிதியை யடைந்து, மீட்சியில்லாத வைகுந்தவாசியின் சாலோக்கியத்தையும், சாமீப்பியத்தையும், சாரூப்பியத்தையும், சாயுஜ்ஜியத்தையும் அடைவான்; அவனோடு கூடியிருப்பான் என்று உபநிடதம்.

பூர்ணமத இதி ஶாந்தி:.

* నజాయతే என்றும் பாடாந்தரம்.

## பாஞ்சராத்திரம்.

పాద్మం పద్మోద్భవం మాయా వైభవం నళకూబరమ్ ।
త్రైలోక్య మోహనం విష్ణు తిలకం పరమాహ్వయమ్ ॥
నారదీయం ధానదీయం వాసిష్ఠం పౌష్కరాహ్వయమ్ ।
సనత్కుమారం సనకం సత్యాఖ్యం విశ్వసంహితా ॥
సనకాన్తాఖ్యం మహీప్రశ్నం శ్రీప్రశ్నం పురుషోత్తమమ్ ।
మాహేంద్రసంహితా పఞ్చ ప్రశ్నాఖ్యం తత్త్వసాగరమ్ ॥
వాగీశం సాత్త్వతం తేజో ద్రవిణం శ్రీకరాహ్వయమ్ ।
సాంపర్తం విష్ణుసద్భావం సిద్ధాన్తం విష్ణుపూర్వకమ్ ॥
విష్ణుతత్త్వఞ్చ కౌమారం రహస్యం విష్ణుపూర్వకమ్ ।
విష్ణువైభావికం సౌరం సౌమ్యమీశ్వరసంహితా ॥
అనంతాఖ్యం భాగవతం జయాఖ్యం మూలసంహితా ।
పుష్టితంత్రం శౌనకీయం మారీచం దక్షసంహితా ॥
ఔపేంద్రం యోగహృదయం హారీతం పారమేశ్వరమ్ ।
ఆత్రేయ మైన్ద్రిరం విష్వక్సేనమౌశనసాహ్వయమ్ ॥
వైహాయసం విహగేంద్రం భార్గవం పరపూరుషమ్ ।
యాజ్ఞవల్క్యం గౌతమీయం పౌలస్త్యం శాకలాహ్వయం ॥
జ్ఞానార్ణవం జామదగ్న్యం యామ్యం నారాయణాత్మకమ్ ।
పారాశర్యఞ్చ జాబాలిం కాపిలం వామనాహ్వయమ్ ॥
జయోనరం బార్హస్పత్యం జైమినం వామనాహ్వయమ్ ।
కాత్యాయనీయం వాల్మీకమౌపగాయన సంహితా ॥
హైరణ్యగర్భ మాగస్త్యం కార్షం బోధాయనాహ్వయమ్ ।
భారద్వాజం నారసింహం గార్గ్యముత్తరపూర్వకమ్ ॥
శాతాతప మాంగీరసం కాశ్యపం పైంగళాహ్వయమ్ ।
త్రైలోక్య విజయం యోగం నారదీయఞ్చ వారుణమ్ ॥
కృష్ణఞ్చామ్బరమాగ్నేయం మార్కండేయస్య సంగ్రహః ।
మహాసనత్కుమారాఖ్యం వ్యాసాఖ్యం విష్ణుసంహితా ॥
సంహితా చాహిర్బుధ్న్యస్య బ్రహ్మరాఘవసంహితా ।
మార్కండేయం పార్వతఞ్చ బ్రహ్మనారదసంహితా ॥
సంవాదశ్శుక్రరుద్రాభ్యా ముమామాహేశ్వరాహ్వయమ్ ।
దత్తాత్రేయఞ్చ శర్వాఖ్యం వారాహం మిహిరాహ్వయమ్ ॥
సంకర్షణాఖ్యం ప్రద్యుమ్నం వామనం కల్కిరాఘవౌ ।
ప్రాచేతసాఖ్యమిత్యేతే శతమష్టోత్తరం స్మృతమ్ ॥

என்பவற்றில்,

பதுமம்
பதுமோற்பவம்
மாயாவைபவம்
நளகூபரம்
திரைலோக்யமோகனம்
விஷ்ணுதிலகம்
பரமாக்குவயம்
நாரதீயம்
தானதீயம்
வசிட்டம்
புட்கரம்
சனற்குமாரம்
சனகம்
சத்தியாக்கியம்
விசுவம்
சநகாந்தம்
மகீபிரசினம்
ஸ்ரீபிரசினம்
புருடோத்தமம்
மகேந்திரம்
பஞ்சபிரசினக்கியம்
தத்துவசாகரம்
வாகீசம்
சாத்துவதம்
தேஜோத்திரவிணம்
ஸ்ரீகராக்குவயம்
சம்பர்த்தம்
விஷ்ணுசற்பாவம்
சித்தாந்தம்
விஷ்ணு பூர்வகம்
விஷ்ணு தத்துவம்
குமாரம்
ரகசியம்
விஷ்ணுவைபாவிகம்
சௌரம்
சௌமியம்
ஈசுவரம்
அநந்தாக்கியம்
பாகவதம்
ஜயாக்கியம்
மூலம்
புஷ்டிதந்திரம்
சௌனகியம்
மாரீசம்
தக்ஷம்
உபேந்திரம்
யோகவிருதயம்
ஆரீதம்
பாரமேசுவரம்
அத்திரேயம்
ஐந்திரம்
விஷ்வக்சேனம்
உசனசாக்குவயம்
வைகாயசம்
விககேந்திரம்
பார்க்கவம்
பரபுருஷம்
யாக்கியவற்கியம்
கௌதமீயம்
புலஸ்தியம்
சாகலாக்குவயம்
ஞானார்ணவம்
ஜமதக்னியம்
யாமியம்
நாராயணாத்துமகம்
பாராசரியம்
ஜாபாலம்
காபிலம்
வாமனாக்குவயம்
ஜயோநரம்
பிருகஸ்பத்யம்
ஜைமினம்
காத்தியாயனீயம்
வான்மீகம்
ஔபகாயனம்
இரணியகர்ப்பம்
ஆகஸ்தியம்
கார்ஷயம்
போதாயனம்
பாரத்வாஜம்
நரசிம்மம்
கார்க்கியம்
உத்திரபூர்வகம்
சாதாதபம்
ஆங்கிரசம்
காசியபம்
பிங்களம்
திரைலோக்கியவிஜயம்
யோகம்
நாரதீயம்
வாருணம்
கிருஷ்ணம்
சாம்பரம்
ஆக்கினேயம்
மார்க்கண்டேய சங்கிரகம்
மகாசனற்குமாரம்
வியாசாக்கியம்
விஷ்ணுசம்மிதை
அகிர்ப்புத்நியம்
பிரம்மராகவம்
மார்க்கண்டேயம்
பார்வதம்
பிரம்மநாரதம்
சம்வாதசுக்கிருத்திரம்
உமாமகேஸ்வரம்
தத்தாத்திரேயம்

சருவாக்கிடம் பிரத்தியும்னம்
வராகம் வாமனம்
மிகிராக்குவயம் கற்கிராகவம்
சங்கருஷணக்கியம் பிராசேதசாக்கியம்

என்று பதும முதலியவைகளில், அநேக சம்மிதைகள் பாஞ்சராத்திரத்தி லுண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில், பதும முதல் பிரசேதம் வரையிற் கூறிய நூற்றெட்டு சம்மிதைகள் பிரதானமானவைகளா யிருக்குமென்றும், மற்றவைகளும் மோக்ஷஹேதுவாகவே யிருக்குமென்று மறிக.

# ஸ்மிருதிஸாரப் பிரகரணம்.

## விருத்த பராசர ஸ்மிருதி.

కైలాసశిఖరే రమ్యే సర్వదేవర్షిసంయుతే ।
దర్భాసనే సమాసీన మృషిభిః పరివారితం ॥

கைலாசபருவதத்தி னுச்சியில், தர்ப்பாசனத்தின்மேல் எழுந்தருளி, ருஷிகளால் சூழ்ந்துகொண்டிருக்கும், (௧)

సర్వవేదార్థతత్త్వజ్ఞం సర్వశాస్త్రవిశారదం ।
సర్వధర్మప్రవక్తారం వృద్ధపారాశరం మునిం ॥

எல்லா வேதார்த்தங்களையுந் தெரிந்தவரும், சகலசாஸ்திரங்களையு மறிந்தவரும், பலதர்மங்களையுஞ் சொல்லக்கூடியவரும், மனனசீலராகிய விருத்த பராசரபகவானிடம், (௨)

మనుసంవర్తహారీత యాజ్ఞవల్క్య పరాశరాః ।
ఋషయస్తు సమాగమ్య పప్రచ్ఛుర్ధర్మకాంక్షయా ॥

மநு, சம்வர்த்தர், ஆரீதர், யாக்கியவற்கியர், பராசரர் என்னும் பெயருடைய ஸ்மிருதி கர்த்தாக்களான இருடிகள், தர்மங்களிற் சிலவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருதி (தேவ ருஷிகளோடு சென்று) வினவுவா ராயினார். (௩)

భగవన్బ్రూహి తుమిచ్ఛామః కలివర్జ్యాన్యశేషతః ।
తానబ్రవీన్మునీన్సర్వాన్ ప్రీతాత్మా శ్రూయతామితి ॥

பகவானே! முக்கியமாய் கலியுகத்தில் விடத்தக்கின தர்மகாரியங்களைக் கேட்பதற்கு இச்சையுடையவர்களாக விருக்கின்றோம், அருளவேண்டுமென, அந்த சகலமுனீந்திரர்களுஞ் சேர்ந்து சந்தோஷமான மனசோடு கூடினவர்களாய் கேட்கின்றார்களென்றுகருதி, (விருத்தபராசரர்) சொல்லுவாராயினர். (௪)

భవద్భిశ్రుతాశ్చప్రోక్తాశ్చ సర్వేధర్మాద్విజోత్తమాః ।
తథాపి వః ప్రవక్ష్యామి ప్రశ్నప్రవచనం ముదా ॥

பிராமணோத்தமர்களே! எல்லாத் தருமங்களும் உங்களால் கேட்கப்பட்டே யிருக்கின்றன; சொல்லப்பட்டு மிருக்கின்றன. ஆயினும் நீங்கள் சந்தோஷத்துடன் கேட்கப்பட்டவைகளுக்கும் உத்தரங்களைச்சொல்லுகின்றேன். (௫)

ద్విజానామసవర్ణాసు కన్యాసూపయమస్తథా ।
దేవరాచ్చ సుతోత్పత్తిర్మధుపర్కే పశోర్వధః ॥

பிராமணர்களுக்குத் தன்வருணத்தைவிட்டு வேறு கன்னிகைகளை விவாகஞ்செய்தல், அப்படியே மறந்தும் அவர்களிடம் புத்திரோற்பத்தி செய்தல், மதுபர்க்ககாலத்தில் பசுவை வதைத்தல், (௬)

మాంసదానం తథా శ్రాద్ధే వానప్రస్థాశ్రమగ్రహః ।
దత్తాహృతాయాః కన్యాయాః పునర్దానం పరస్య చ ॥

அப்படியே சிரார்த்தகாலத்தில் மாமிசங்கொடுத்தல், வானப்பிரஸ்தாசிரமத்தை யடைதல், தத்துகொடுக்காமல் கிரகிக்கப்பட்ட கன்னிகையை, மீண்டும் ஒருவனுக்குத் தானஞ்செய்தல்,

సముద్రయానస్వీకారః కమండలువిధారణం ।
మహాప్రస్థానగమనం గోమేధశ్చ తథా మఖః ॥

கப்பல்யாத்திரை செய்வதற்கு அங்கீகரித்தல், எப்போதும் ஜலபாத்திரத்தைத் தரித்தல், புநராவிருத்தி ரஹிதமான யாத்திரை, கோமேதம் அப்படியே சத்திரயாகம், (௮)

దీర్ఘకాలబ్రహ్మచర్యం నరమేధాశ్వమేధకౌ ।
విధవాయాం ప్రజోత్పత్తౌ దేవరస్య నియోజనం ॥

அநேககாலம் பிரமசாரி விரதத்தை யடைதல், நரமேதம், அசுவமேதம் செய்தல், விதவைகளிடம் புத்திரோற்பத்திசெய்ய மறதியாற் கூடுதல், (௯)

దారాయాః క్షతయోన్యాస్తు సంస్కృతిస్తుపరేణతు ।
ఆతతాయిద్విజాగ్ర్యాణాం ధర్మయుద్ధేనిహింసనం ॥

க்ஷதயோநியுடைய மனைவியை பிறருக்கு விவாகஞ்செய்தல், தர்மமான யுத்தத்தினிடத்தில் கொல்லுவதற்குவந்தபிராமணர்களைவதைத்தல்,

ద్విజస్యాబ్ధౌ తు నౌయాతుః శోధితస్యాపి సంగ్రహః ।
శస్త్రదీక్షాపి సర్వేషాం ద్విజానాం ప్రాణిహింసనం ॥

சமுத்திரத்தில் கப்பல்மேலேபோன பிராமணன் பிராயச்சித்தஞ் செய்துகொண்டாலுஞ் சுவீகாரஞ்செய்தல், க்ஷத்திரியர் முதலானவர்க

ளுக்கு ஆயுததீக்ஷை, துவிஜர்களுக்கு ஆகாரத்தின்பொருட்டு பிராணியிமிஸை, (கக)

సౌత్రామణ్యామపి సురా గ్రహణస్య చ సంగ్రహః ।
అగ్నిహోత్రహవణ్యాశ్చ దేహలీఢాపరిగ్రహః ॥

சௌத்திராமணி கர்மத்திலுங்கூட கட்குடித்தல், யாகஞ்செய்தவர்கள் இறந்துபோனபின் புத்திரர்களால் அன்னார் யாகபாத்திரங்களை யடைதல், யாகதீக்ஷிதன் சரீரத்தை நகத்தினல் சொரிந்துகொள்ளுதல், (கஉ)

వృత్తస్వాధ్యాయసాపేక్ష అఘసంకోచనంకలౌ ।
ప్రాయశ్చిత్తవిధానంచ విప్రాణాంమరణాంతికం ॥

நியமத்துடன் வேதாத்தியயனஞ் செய்யக்கோருதல், கலியுகத்தில் மகாநதிகள் பர்வதங்கள் குறுக்கே மறிப்பதினல் சூதகத்தைப்பற்றிச் சங்கோசித்தல், பிராமணர்களுக்கு மரணமே முடிவாயுடைய பிராயச்சித்தத்தை விதித்தல், (கங)

సంసర్గదోషస్తేనాద్యైర్మహాపాతకనిష్కృతిః ।
వరాతిథిపితృభ్యశ్చ పశూపాకరణక్రియా ॥

திருடர் முதலானவர்களுடன் சம்சர்க்க தோஷத்திற்குப் பிராயச்சித்தம், மகாபாதகத்திற்குப் பிராயச்சித்தம், வரன் அதிதி பிதுர்க்களுக்கு ஆகாரார்த்தமாகப் பசுக்களைக் கொன்று உபசரித்தல், (கச)

సవర్ణాద్యాగతాందుష్టాం సంసర్గేశోధితైరపి ।
అయోగ్యసంగ్రహేవృత్తిః పరిత్యాగోగురుస్త్రియాః ॥

தன்குலத்தில் வியபிசாரஞ் செய்த ஸ்திரீ பிராயச்சித்த கிரியைசெய்துகொண்டாலும்அவளிடம் சம்சர்க்கம், அயோக்கிய ஸ்திரீயை மனைவியாகக்கொள்ளுதல், குருஸ்தானத்திலிருக்கும் தாயினுடைய பரித்தியாகம், (கரு)

పరోద్దేశాత్మసంత్యాగః ఉచ్ఛిష్టస్యాపివర్జనం ।
ప్రతిమాభ్యర్చనార్థాయ సంకల్పశ్చ సధర్మకః.

பிறர்பொருட்டு தேகத்தை விடுதல், நித்திய கர்ம தியாகம், விக்கிரகாராதனத்தின்பொருட்டு தர்மபிராப்தி வேண்டுமென்று வேதனம் வாங்கிக்கொண்டு சங்கற்பஞ்செய்தல், (கசா)

అస్థిసంచయనాదూర్ధ్వం అంగస్పర్శనమేవచ ।
శామిత్రంచైవవిప్రాణాం సోమవిక్రయణంతథా ॥

அஸ்திசஞ்சயன மானதின்மேலே, கர்த்தாவினுடைய அங்கஸ்பரிசனம், பிராம்மணர்கள் யாகத்தில் பசுவைக்கொல்லுதல், அப்படியே சோமபானத்தை விக்கிரயத்தில், (கஎ)

షడ్భక్తాశనసేవాన్న హరణంహీనకర్మణః ॥

பகற்காலத்தை ஆறுபாகமாமக்கி, ஆறும்பாகத்தில் அன்னம் புசித்தல், ஈனத்தொழிலுடையவர்களிடம் அன்னத்தைக்கிரகித்தல். (கஎஉ)

ఆపద్వృత్తిర్ద్విజాగ్ర్యాణాం అశ్వస్తనికతాతథా ।
ప్రజార్థంతుద్విజాగ్ర్యాణాం ప్రజారణిపరిగ్రహః ॥

பிராமணர்களுக்கு (சண்டாளர் முதலானவர்களாலே அடையப்பட்ட மாம்சத்தினல் ஜீவனஞ்செய்யும்) ஆபத்துவிருத்தி, மறுநாள் சீவனர்த்தமாக பதார்த்தங்களை வைக்காமலிருத்தல், அப்படியே பிராம்மணர்கள் சந்தானத்தின்பொருட்டு இதரமனைவியின் க்ஷேத்திரத்தை யடைதல், (கஅஉ)

బ్రాహ్మణానాం ప్రవాసిత్వం ముఖాగ్నిధమనక్రియా ।
బలాత్కారాదిదుష్టస్త్రీసంగ్రహోవిధిచోదితః ॥

பிராம்மணர்களுக்கு நித்தியசஞ்சாரம், அக்கினியை வாயினலூதி சுவாலிக்கச் செய்தல், சாஸ்திரசம்மதமில்லாத காமாதுரத்தினல் பலவந்தப்படுத்தின துஷ்டஸ்திரீயை யடைதல், (ககூஉ

యతేశ్చసర్వవర్ణేషు భిక్షాచర్యావిధానకం ।
నవోదకేవిధానంచ దక్షిణాగురుచోదితా ॥
బ్రాహ్మణాదిషుశూద్రస్య పచనాదిపరిక్రియా ॥

யதிகள் எல்லா வர்ணத்திலும் பிக்ஷை யெடுத்தல், புதிதாய் வெட்டப்பட்ட ஏரிமுதலியவைகளிலிருக்கும் ஜலத்தில் ஆசமனதிகிரியைசெய்யாமலிருத்தல், குருவினல் நிச்சயிக்கப்பட்ட ரக்ஷிணையைக்கொடுத்தல், பிராம்மணாதிவர்ணங்களில் சூத்திரர்கள் சமையல் செய்தல்., (உக)

భృగ్వగ్నిమరణైశ్చైవ ప్రాయశ్చిత్తవిధానకం ।
గోతృప్తిశిష్టపయసి శిష్టైరాచమనక్రియా ॥

மலைமீதினின்று கீழேவிழுவதினலும் அக்கினியில் பிரவேசிப்பதினலும் மரணத்தை யுண்டாக்கும் பிராயச்சித்தத்தை யுண்டாக்கல், பசு குடித்து மிகுந்த ஜலத்தில் ஆசமனம் செய்தல். (உஉ)

పితాపుత్రవివాదేషు సాక్షిణాందండకల్పనం ।
యతేస్సాయం గృహస్థత్వం కలౌనోక్తంతుసూరిభిః ॥

தந்தை, தனயன் இவர்களிலுண்டாகும் விவாதத்தில் சாக்ஷிகளுக்குச் சிக்ஷை செய்தல், சந்நியாசி சாயங்காலமானதும் கிருகங்களில் வாசஞ்செய்தல், இவைகள் வித்துவான்களால் சொல்லப்படவில்லை. (உங)

(வரும்.)

# இதிகாசபுராணப்பிரகரணம்.

## சாம அதர்வண வேத புராணங்களின் வரலாறு.

(விஷ்ணுபுராணத்திலிருந் தெடுத்தது.)

சாமவேத விருக்ஷத்தின் சாகாபேதங்க ளாவன :—வியாச சிஷியரான ஜைமுனியானவர் தம்முடையகுமாரரான சுமந்துவென்பவ்ருக்கு ஒரு சங்கிதையை யுபதேசிக்க, அவரும் தம்முடைய புத்திரனை சுத்துவாவென்பவருக்கு உபதேசித்தார். பின்பு அந்தச் சுத்துவாவின் குமாரனை சுகர்மாவென்பவர் தம்பிதாவினிடத்திலே தாமோதின அந்தச்சைமுனி சங்கிதையை ஆயிரம்பிரிவாகப் பிரித்துத் தஞ்சிஷ்யர்களான ஹிரண்யநாபனென்பவருக்கும், பவுஷபிஞ்சி யென்பவருக்கும் பிரசாதித்தார். கவுசல்ப னென்றும் பெயர்பெற்ற அந்த இரணியநாபருக்கு வடதிசையார் ஐந்நூறுபேர் சாமசாகை யோதுகிற சிஷரானார்கள். அவர்கள் ஐந்நூறு சாகைகளை யோதிக்கொண்டு ஒருகாலத்தில் கீழ்த்திசையிலிருந்ததனால் கீழ்த்திசைச்சாமகர் என்றுஞ்சொல்லப்பட்டார்கள். அந்தப் பவுஷ்பிஞ்சி யென்பவருக்கும் லோகாக்ஷி, கவுமுதி, கக்ஷிவான், லாங்கலி முதலான அநேகர் சிஷ்யரா யிருந்தார்கள். அவர்கள் தாங்களோதின சங்கிதைகளைப் பலவாக விரித்தார்கள். முன்சொன்ன இரணியநாபருடைய சிஷர்களில் ஒருவரான கிருதநாமாவென்பவர் இருபத்துநான்குசங்கிதைகளைத் தம் மாணக்கருக்கு ஓதுவித்தார். அவர்களும் இந்தச் சாமவேதத்தை மிகவும் விரித்தார்கள்.

அதர்வணவேதத்தின் பிரிவுகளாவன :—வேதவியாச மகாமுனிவரிடத்திலே அதர்வண வேதமோதின சுமந்துவென்னு முனிவர் அவ்வதர்வணவேதத்தைத் தம்முடைய சிஷரான கபந்தனென்பவருக்குக் கொடுத்தார். அந்தக்கபந்தமுனியும் அவ்வேதத்தை இரண்டுபிரிவாக்கி தேவதரிசர், பத்தியர் என்கிற சிஷருக்குக் கொடுத்தார். அந்தத் தேவதரிசருக்கு மேதன், பிரமபலி, சுவுல்காயனி, பிப்பலாதன் என்று நால்வர் மாணக்கரிருந்தார்கள். அவர்கள்தேவதரிசர் செய்த நான்கு சங்கிதைகளையு முறையேயோதினார்கள். பத்தியருக்கும் ஜாபாலி, குமுதாதி, சவுனகர் என்று மூவர் மாணக்கரிருந்தார்கள். அவர்கள் தன் குருபிரித்த மூன்று சங்கிதைகளையும் அநேக சங்கிதைகளாகச் செய்தார்கள். அந்தச் சவுனகரென்பவர் தம்முடைய சங்கிதையை இரண்டாக்கி பப்புருவென்பவருக்கு ஒன்றும், சைந்தவனென்பவருக்கு மற்றொன்றுமாகக் கொடுத்தார். அந்தச் சைந்தவருடைய சிஷ்யரான முஞ்சிகேசரென்பவர் தாம்பெற்ற சங்கிதையை இரண்டாகப் பிரித்தார். அந்தச் சங்கிதைகளிலே முக்கியமான பாகங்கள் ஐந்து. அவையாவன :—நக்ஷத்திரகல்ப்பம், வேதகல்ப்பம், சங்கிதாகல்ப்பம், ஆங்கிரசகல்ப்பம், சாந்திகல்ப்பம் என்பவைகளாம். [நக்ஷத்திரகல்ப்பமாவது நக்ஷத்திராதிகளுடைய சொரூபகுணாதிகளை விவரிப்பது. வேதகல்ப்பமாவது பிரமத்துவ முதலான புரோகிதகாரியங்களைத் தெரிவிப்பது. சங்கிதாகல்ப்பமாவது மந்திரங்களின் ஏற்பாட்டையுணர்த்துவது. ஆங்கிரசகல்ப்பமாவது ஸ்தம்பன மோகன மாரணாதிகளான அபிசாரங்களைக்காட்டுவது. சாந்திகல்ப்பமாவது யானை, குதிரை முதலானவைகளைப்பற்றிய பதினெட்டு சாந்திகளை விரிப்பது.] அதர்வணவேதத்திலே இவைதாம் சிரேஷ்டமானவை.

இனி புராணவரலாறு கேளும், புராணமென்பது சாஸ்திரங்களுக்கெல்லாம் முதன்மையானது. அது கிரதயுகத்தில் பிரமாவினால் நூறு கோடி கிரந்தவிஸ்தாரமாய்ச் செய்யப்பட்டு பிராம்மம் என்கிற பெயருடையதாய் ஒன்றேயாயிருந்தது. பின்பு திரேதாயுகத்திலே அதை ரிஷிகள் நூற்றுப்பதினெட்டுச் சங்கிதைகளோடு கூடின பதினெட்டுப் பிரிவுள்ளதாய்க் கோடி கிரந்த விஸ்தாரமாய்ச் செய்தார்கள். பிற்பாடு வேதவியாசர் துவாபரயுகத்தின் கடைசியிலே அந்தப்புராணங்களின் சாரங்களையெடுத்து நான்குலக்ஷ கிரந்த விஸ்தாரமுள்ளதாய் பாரதாதி ஆக்கியானங்களும் ருபுநிதாக சரித்திராதி உபாக்கியானங்களும் பிருதிவீகீதை, பிதுருகீதை முதலான காதைகளும், வராககல்ப்பாதி கல்ப்ப நிர்ணயங்களும் சிருஷ்டி மனுவந்த் ராதிகளும் வமிசவமிசானு சரித்திரங்களும் விளங்கும்படி பதினெட்டுப்புராண சங்கிதைகளைச்செய்து தம்முடைய சிஷ்யரான ரோமகர்ஷண னென்கிறவருக்கு உபதேசித்தருளினார். அந்த ரோமகர்ஷணருக்கு சுமதி, அக்கினிவர்ச்சன், மித்திராயு, சாம்சபாயனன், அகிதவிரணன், சாவர்ணி என்று ஆறுசிஷ்ய ரிருந்தார்கள். அவர்களில் அகிருதவிரணரும், சாவர்ணியும், சாம்சபாயனரும், வியாசகிருதமான புராணசங்கிதையைப் பற்றித் தாங்களும் சிலசங்கிதைகள் செய்தார்கள். இவற்றிற்குமூலமாய் ரோமகர்ஷணராலே ஒருசங்கிதை செய்யப்பட்டிருந்தது. இந்நான்கின் சாரத்தைக்கொண்டுதான் விஷ்ணுபுராணத்தை பராசரால் சொல்லப்பட்டது.

எல்லாப்புராணங்களுக்கும் முதன்மையாயிருந்தது பிராம்மபுராணம். அதுமுதலாகப் பதினெட்டுப் புராணங்களுண்டு. அவையாவன:— பிராம்மம், பாத்துமம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பவிஷ்யத்து, பிரம்மகைவர்த்தம், லைங்கம், வாராகம், ஸ்காந்தம், வாமனம், கவுர்மம், மாச்சியம், காருடம், பிரமாண்டம் என்பதாம். இப்புராணங்களுக்கெல்லாம் பொதுவிலக்கணமென்னவென்றால்; சிருட்டி, சங்காரம், வமிசங்கள், மனுவந்தரங்கள், வமிசங்களின் சரித்திரம் என்கிற இவற்றைத்தெரிவிப்பதுதான். எல்லாப்புராணங்களிலுஞ் சொல்லப்படுகிற சிருட்டி முதலானவைகளிலே ஸ்ரீவிஷ்ணுவே கர்த்துருத்துவாதி தருமங்களைக்கொண்டு சொல்லப்படுகிறார்.

ஆத்துமகோடிகள் அறியவேண்டிய சகலதருமங்களையும் பிரதிபாதிக்கின்ற சாஸ்திரங்கள் எவையென்றால், முன்சொல்லப்பட்ட இருக்கு முதலான வேதங்கள் நான்கும் அவற்றின் அங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கல்ப்பம் என்கிற ஆறும், மீமாஞ்சையும், நியாயநூலும், இதிகாசபுராணங்களும், தருமசாஸ்திரங்களுமாகிய இப்பதினன்குமாம். இவைகளுக்கு வித்தியாஸ்தானங்களென்றும்பெயர். அன்றியும் ஆயுர்வேதம் என்கிற வைத்தியசாஸ்திரமும், தநுர்வேதமென்கிற ஆயுதசாஸ்திரமும், காந்தருவ மென்கிற சங்கீத சாஸ்திரமும், அர்த்தசாஸ்திரமென்கிற இராஜநீதிசாஸ்திரமும், உபவித்தைகளென்று சொல்லப்படும். ஆகப் பதினெட்டுவித்தைகளுண்டென்பார்கள். இந்தச்சாஸ்திரங்களைப் பிரவர்த்திப்பித்தவர்கள் பிரமரிஷிகளென்றும், தேவரிஷிகளென்றும், ராஜரிஷிகளென்றும் மூன்று வகுப்புள்ள ரிஷிகளேயாம். இதுகாறும் மூலசாகைகளையும், சாகைகளின் பிரிவுகளையும், அவற்றின் கர்த்தாக்களையும், அவை பிரிவதன் காரணத்தையும், விசாரிக்கப்பட்டது. சகல மனுவந்தரத்திலேயும் இப்படி சாகைகளின்பிரிவு சமானந்தான். ஆதியில் பிரமாவினாலே அறியப்பட்ட வேதமானது நித்தியமேயாம். ஆதலின் இச்சாகைகளெல்லாம் அவற்றின் விகற்பங்களென்றறியும். இப்படி வேதசம்பந்தமான சகலமுந்தெரிவிக்கப்பட்டது. புராணமென்பது, ஆதியில் ஒன்றாயிருந்து பின்பு பலராலே பலபிரிவாகச்செய்யப்பட்டபடியால் ஒவ்வொருபுராணத்துக்கும் நான்குசங்கிதைகளும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்துக்குமாத்திரம் ஆறு சங்கிதைகளுமுண்டு.

# ஆரியமதசித்தாந்தப் பிரகரணம்.

## சைவமதம்.

### இலிங்கம்.

இலிங்கம் என்பது "லிக்" என்னுந் தாது அடியாகப் பிறந்தது. "லிக்" என்றால், பிரம்மத்தையறியுஞ் சாதனமென்று அர்த்தம். "லிங்க்யதே ஜ்ஞாயதே அநேநேதி லிங்கம்" என்று லிங்காபட்டீயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இலிங்கம் என்பது அடையாளம். ஆகையால் வேதவித்துக்கள் இலிங்கம்என்றும் மகாலிங்கம்என்றும் சொல்லுவார்கள். மகாலிங்கம் என்பதை பிரமா, விஷ்ணு, சிவன் இம்மூவருங்கூடியிருத்தற்குக்கூறுவர்; என்றால் மூவரும் ஒருருவமாகிய பிரம்மமென்றே அதன்தாற்பரியம். பிரம்மா சிருஷ்டிகர்த்தாவும், விஷ்ணு இரக்ஷிக்கிற கர்த்தாவும், சிவன் சம்மார கர்த்தாவுமாயிருக்கிறபடியால் மூவரும் ஒருங்குசேர்ந்தாலன்றி பிரபஞ்ச சிருஷ்டி ஸ்திதி சம்மாரம் நடவாது. ஆதலினால் எல்லாவற்றையும் நடத்தும் பிரம்மத்துக்கு அடையாளமாக இலிங்கம் ஏற்பட்டது. படவே, "பஶ்யந்தி தத்பரம் ப்ரஹ்ம, யத்தலிங்கமிதிஶ்ருதிம்" என்று வேதங்கூறிற்று. கூர்மபுராணத்தில்,

> పరానందాత్మకం లిఙ్గం కేవలం సన్నిరంజనం ।
> జ్ఞానాత్మకం సర్వగతం యోగినాం హృదిసంస్థితం ॥
> లిఙ్గం తల్లిఙ్గనాద్విప్రేన్ద్రా బ్రహ్మణః పరమం వపుః ।

என்றும், இலிங்கபுராணத்தில்,

> లిఙ్గం సాక్షాన్మహేశ్వరః ॥

என்றும், அக்கினிபுராணத்தில்,

> లిఙ్గాదిలక్షణం వక్ష్యే కమలోద్భవ తచ్ఛృణు ।
> బ్రహ్మవిష్ణుశివాంశేషు వర్ధమానోయ ముచ్యతే ॥

என்றும், இலிங்கபுராணம் துவிதீயபாகத்தில்,

> లిఙ్గమేకతమం శైలం బ్రహ్మవిష్ణుశివాత్మకమ్ ।

என்றும் சொல்லியவற்றில், மகாலிங்கம் இரண்டுவிதமாயிருக்கும். அதிலொன்று வேதியென்றும், மற்றொன்று இலிங்கமென்றும் சொல்லப்படும். வேதி மூல பீடமென்றும், ஊர்த்துவ பீடமென்றும் இரண்டு விபாகங்களாயிருக்கும். இம்மூன்றுஞ்சேர்ந்தே மகாலிங்கம். இவ்விலிங்கம் திரிமூர்த்திகள் ஒருவஸ்துவினிடத்திலிருந்தே தோன்றினவர்களென்று தெரியப்படுத்தும் சின்னம்=இலிங்கமாயிருக்கிறது. இந்த மகாலிங்

கத்தில் மூலபீடம் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவை விளக்கும். ஊர்த்துவபீடம் இரக்ஷகனாகும் விஷ்ணுவை விளக்கும். சம்மார கர்த்தாவாகும் ருத்திரனே இலிங்கம் என்னும் நாமத்தினுல் விளக்கும். இவ்வபிப்பிராயத்தை, இலிங்க புராணத்திலேயே,

మూలే బ్రహ్మా తథామధ్యే విష్ణుస్త్రిభువనేశ్వరః ।
రుద్రోపరి మహాదేవః ప్రణవాఖ్య స్సదాశివః ॥

మూలే బ్రహ్మా వసతి భగవాన్ మధ్యభాగేచవిష్ణుః ।
సర్వేశానః పశుపతి రజోరుద్రమూర్తిర్వరేణ్యః ।
తస్మాలిఙ్గం గురుతరతరం స్థాపయేద్భూజయేద్వా ॥

என்றும், மச்சியபுராணத்தில்,

మాహేశ్వరం త్రిభాగంతు ఊర్ధ్వం వృత్తంతు యత్స్మృతం ।
అధస్తాద్బ్రహ్మ భాగస్తు చతురశ్రో విధీయతే ॥

అష్టాశ్రో వైష్ణవో భాగో మధ్యస్తస్య ఉదాహృతః ।
ఏవం ప్రమాణ యుక్తంచ లిఙ్గంవృద్ధి ప్రదంభవేత్ ॥

என்றும் விளக்கப்பட்டது. பின்னும் இவற்றின் தாற்பரியத்தை (கலாவர்த்தனியில்) மொழிபெயர்த் திருக்கிறது:—

"அலிங்கத்தில் லிங்கங்காரணமாக விருக்கிறபடியினலே அவ்வியக்த லிங்கமென்று சொல்லப்படுகிறது. பரமசிவன் லிங்கரகிதன். லிங்கம் சைவமென்று சொல்லப்படுகின்றது. அந்த உத்தமமாகிய லிங்கத்தைப் பிரதான மென்றும் பிரகிருதியென்றும் சொல்லுகிருர்கள். அந்தப் பரமசிவத்துக்கு ஸ்தூலம் சூக்ஷ்மமென்று இரண்டு சொரூபம் உண்டு; கந்தவர்ண ஸ்பரிசம்முதலியவைகளில்லாமலும், குணரகிதமாயும், நித்தியமாயும், அக்ஷயமாயும் இருக்கிற மூர்த்தி யொன்று; கந்தரசாதி யுக்த்தமாயும், ஜகத்துக்குக் காரணமாயும், ஸ்தூலமாயு மிருக்கின்ற மூர்த்தியொன்று. அலிங்கமூர்த்தியிலிருந்து லிங்கமூர்த்தியானது. அது ஏழு, எட்டு, பதினெருவிதமா யிருக்கின்றது. மாயை சம்பந்தத்தை யுடையது. அதினின்று பிரதானதேவர்கள் மூவருண்டாயினர். இந்தப்பிரபஞ்சமெல்லாம் அந்த ஒருவராலேயே ரக்ஷிக்கப்படுகின்றது. அந்த ஒருவராலேயே சம்ஹாரம் பண்ணப்படுகின்றது. இந்த உலகமெல்லாம் அவரோ வியாபித்திருக்கிருர். ஆகையினலே அந்தப் பிரமத்துக்கு மூன்றுசொரூபம். அலிங்கரூபம் ஒன்று, லிங்கரூபம் ஒன்று, லிங்கா லிங்கரூப மொன்று. இந்த உலகமெல்லாம் அந்தப்பிரமத்தின் சொரூபமாயிருக்கிறது. அலிங்கமூர்த்தியாகிய பரமேசுவரன் இந்த ஜகத்தைக் குறித்துப் பீஜமாக விருக்கிருர். பீஜமென்பது காரணம். சரீரமில்லாமல் தேஜோரூபமாகிய பகவான் இந்த ஜகத்து நிர்மாணத்தைக் குறித்துக் காரணத்தை அங்கீகரித்திருக்கிருர். இதினின்றும் பீஜம், யோனி, பிரதானம், மாத்திரை, வர்ணங்கள் அவ்வகையெல்லாம் உண்டாயிருக்கின்றன. அந்தப்பகவான் பரமாத்துமாவென்றும், ருஷியென்றும், பிரமமென்றும், நித்தியனென்றும், பரிசுத்தனென்றும், எல்லாம் வல்லவனென்றும், ருத்திரனென்றும், புராணனென்றும், சிவனென்றும் சொல்லப்பட்டிருக்கின்றுர். அந்தப் பரமசிவனலே பிரகிருதியென்கிற சிவசத்தியானவள் சிருஷ்டிக்கப்பட்டாள். அவள் சிருஷ்டிகாலத்தில் குணங்களுடன் சம்பந்தத்தை அடைந்திருக்கிருள். சுபாவத்தில் நிர்க்குணையாய் அவ்வியக்தையாக விருக்கிருள். விஷயமுதல் விசேஷாந்தமாகிய இவ்வுலகமெல்லாம் அவளாலேயே உண்டாயிருக்கிறது. விசுவதாத்திரி யென்றும், அஜையென்றும், பிரகிருதியென்றும் அந்தச்சக்தி சொல்லப்படுகிருள். அந்தச்சக்தியை அஜையென்றும், லோகிதையென்றும், கிருஷ்ணையென்றும், சுக்லையென்றும், ருஷிகள் தியானிக்கிருர்கள். அந்தப்பராசத்தியுடன் பரமேசுவரன் எப்போதும் கூடியிருக்கிருர். பகவான் ஒருவரால் உண்டாக்கப்பட்டவரல்ல அஜர். அந்தப் பராசத்தியும் ஒருவரால் உண்டாக்கப்பட்டவளல்ல அவளும் அஜை. இந்த உலகத்துக்கெல்லாம் தாய்"

பின்னும் இலிங்கம் மனிதனுடைய சிரசையும், மகாலிங்கம் ஆபாதமஸ்தகபரியந்த தேகத்தையும் விளக்கும், இஃதன்றியில், சமாதிஸ்திதியிலிருக்கும் யோகியினுடைய ஆகாரத்தையும் இலிங்கமாக வுணர்த்தும். யோகி சமாதி ஸ்திதியை யடைய பிரயத்தினப்படுங்காலத்தில் தன் தேகத்தை ஒருஸ்திதியையடையச்செய்வதினுல் ஞானனந்தரத்தில், அவ்வியோகியின் சரீரம் காலக்கிரமமாக ஸ்தம்பித்து சிலையாய் மாறிப் போகுமென்று யோகசித்தாந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதன்பின் இத்தேகம் இலிங்காகாரமாகும். இதுசுயம்பென்றுசொல்லப்படும்.

சமாதி ஸ்திதியிடத்தில் யோகியின் தேகம் மகாலிங்கத்திற்குச் சமானமாகச் சொல்லுவதற்குச் சந்தேகமென்னே? மகாலிங்கத்தினிடத்தில் அக்கிரபாகமாகும் இலிங்கமே யோகியின் சிரஸு, ஊர்த்துவபீடம் சிரசு நடுவிற்கு மத்தியபாகம், இரண்டுபீடங்களுக்கு மத்தியபிரதேசம் யோகியினுடைய நடு. யோகி பதுமாசன ஸ்திதியிலிருக்கும் பாதங்களே மூலபீடம். இப்படியாவதினுல் யோகியினுடைய சிரசே இலிங்க

மென்று (ஆந்திரபாஷையிற் பிரசுரமாகும் சங்மார்க்கபோதினி) கூறுகின்றது.

இலிங்கமென்பது ஆண்குறியென்று சில மதவாதிகள் புராணஆதாரங்களைக்கொண்டு வாதிடுவர். அக்கதைகளையும் ஈண்டு சுருக்கி விவகரிக்கின்றோம்:—ஓர்காலத்தில் பிருகுமுனி கைலாயத்திற்குச் சிவபிரானைத் தரிசிக்கப்போகையில், அம்முனி தாமதகுணக்காரமாயிருக்ததை யுணர்ந்த சிவபிரான், தனது படாஹக்கு முனியை உள்ளே விடவேண்டாம், முனிகேட்கில் பார்வதியுடன் அந்தரங்கமா யிருக்கிறாரென்று சொல்லும்படி ஆஞ்ஞாபித்ததாகவும், அப்படியே முனியானவர் அநேகநாள் காத்தும் தரிசனங் கிட்டாமையால், முனிந்து, (பிராம்மபுராணத்தில்,

తతోవాక్యాన్మునీంద్రస్య దేవోబాలేందుశేఖర ।
శ్శంకరశ్ఛిన్నలింగస్తు కాననేవచచారహః ॥

என்று) தம்பதிகளுடைய குறி அற்றுவிழும்படி சபித்தனர் என்றும், தாருகாவனத்து ருஷிகளின்பத்தினிகள் தம்மைவிடப் பதிவிரதைகள் இல்லையென்று அகங்கரித்திருந்தமையால், அவர்களைச்சோதிக்கவேண்டி, சிவபிரான், பிக்ஷாடன மூர்த்தியாய், (ஸ்ரீபதுமம், மாகமகத்துவத்தில்,

రూపేణ మోహయామాస రుషిపత్నీ స్సహస్రసః ।
వీధీషు చక్షురత్ శమ్భు ర్మహానధిక రూపవాన్ ॥
తంద్రుష్ట్వా మునయస్సర్వే పత్నీస్స మదనాతురాః ।
సంమోహ ఇత్యూచుః పత్నీ రసాంగచ్ఛతిశంకరః ॥
ఇత్యుక్త్వా మునయస్సర్వే క్రోధవేగవశానుగాః ।
శేపుస్తే పరమేశానం సమేత్యత్య ధుగపన్నృప ॥
ఛిత్వాలింగం పతత్వస్య భూమౌ నవృషణం హరాత్ ।
శపస్త్యైవం పశుపతేర్భ్రాతృత్త్రైరభవ త్తదా ॥

என்று, கூறியவற்றில்,) தன்னுடைய அதிரூபலாவண்ணியத்தினால், ருஷி பத்தினிகள் மோஹிக்கும்படி தாருகாவனத்தில் திரிந்ததாகவும், அதைக்கண்ட ருஷிகள் கோபங்கொண்டு சங்கரனுடைய விருஷணங்களோடுகூடிய லிங்கம் அறுந்துவிழும்படி சபித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும்,—

மச்சபுராணம் - உத்தரகாண்டம்,
௬0-வது, அத்தியாயம்.

கூடாரெனவே முனிவரர்கள் கூடிக்கொடிய திவாதுர்த்தர், வாடாவடிவிற்சங்கமவி மடவார் கற்பின் வரம்பழித்தாய், கேடாயுனதாண் குறி யழுகிக் கீழேவிழ்க வெனச்சபித்தார், நாடாச் சாபவட்சரந்து ளாகநகைத்தார் கங்காளர். (உச)

அரிமுக னேக்கிச்சேடன் முனிவர் ரறைந்த சாபப், பரிசெவண் போயதேயோ பகர்கெனப் பகர்வானம்பன், அரியமெய் யிடத்திற்சாப மணுகிடா துரவோன் ஈனே, புரிதருசாப ஞான்றும் புகல்செகத் தறங்களோங்க. (௩௯)

வேண்டுமென் றெண்ணி நங்கண் விளங்குமான் குறிபோலெங்கும், காண்டுறு மவற்றையாவர் கருதிப்பூசனைக ளாற்றிப், பூண்டெம்மைப் போற்றிலாய்கண் பொருந்திமெய்த் தன்மமத்தங், கூண்டுறுகாமமோட்சங் குறைவறக் கொடுப்போமென்றார். (௪0)

என்றரன் கூறும்வண்ண மிருஞ்சிலே சுயம்புமன்றிப், பொன்றிறல் வெள்ளிக்கஞ்சந் தாம்பிரமிரதம்பூமி, யொன்றுமிர்த்திகைபைந்தாரு வாதியாமிவற்றாலோங்க, நன்றிகூ றிலிங்கஞ்செய்து சத்தியை நணுகச்சேர்த்தி. (௪௧)

விதிப்பிரகாரம்பூசித் தருச்சித்து முனிவர்விண்ணோர், கதித்திறம்பெற்றார்தாரு காவனத்தயன்விண்ணோர்கள், மதித்திறச் சனகராதி வந்து பூசனைகளாற்றி, துதித்துக் கங்காளநாதர் துணைப்பதம் போற்றினரே. (௪௨)

இவ்வண்ணம் ருஷிகள் தாமசகுண வசத்தராய்ச் சாபமிட்டாலும், அச்சாபமானது அச்சம்புதம்மேற் பாயாது நகைத்தொழித்தார். ஆயினும், அச்சாபம் வீண்போகாமல் சிவபிரான் இச்சாபவிலிங்கத்தையும் பிரமத்திற்குச் சமானமாகக் கூறி, பூசைசெய்ய அருள் புரிந்தவாறு, இலிங்கங்களைத்தாபித்து, முனிவர், தேவர், சனகாதியர் முதலியர் போற்றிக் கௌரவித்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவற்றின்அந்தரார்த்தையோசிக்கின்புராணங்களின்மேலும், சிவபிரான்மேலும் ஓர்குற்றமுஞ்சாரா. குற்றமாகப்பாவிக்கின் புராணசரித்திரங்கள் யாவுங் குற்றமேயாகும். அச்சரித்திரங்களெல்லாம் லோகோஜ்ஜீவனமாக நல்லது தீயது இன்னவையென்று மும்மூர்த்திகளும் நடித்துக்காட்டிய அவசரமேயன்றி, அவர்களவ்வாறுமனிதர்களிலுள்ளகாமிகளைப்போல்செய்தாரென்பது ஆராய்ச்சியில்லாதார்கூற்று. அறிவையிழந்தமானிடர்களுக்கு எவ்விஷயமும் அநுஷ்டித்துக்காட்டி, அதனால்வரும் இன்பதுன்பங்களை விளக்கிவைக்காமற்போனால், அவர்கள் கண்திறப்பதில்லை. இவ்விலிங்க விஷயமாகப் பின்னர் விரிவாகக் கூறுவோமாக.

## அத்வைதமதம்.

(௭௪-ம் பக்கத் தொடர்.)

ஆகாச முதலான பஞ்சபூதங்களி னுடைய ரஜோம்சத்திலே ஒவ்வொருபூசத்தி னெவ்வொரு மாத்திரைகள் தனித்தனியே வாக்காதி கர்மேந்திரியங்களாயின. இவைகளில் ஆகாசத்தினிடமாய் வாக்குவசனிக்கும், வாயுவினிடமாகப் பாணியிடுதலு மேற்றலுஞ் செய்யும், அக்கினியினிடமாக பாதம் நடக்கும், அப்புவினிடமாக பாயுரு மலஜலாதிகளை வெளியிலே தள்ளும், பிருதுவியினிடமாக உபஸ்தம் ஆனந்திப்பிக்கும். இவ்வைந்தும் தனித்தனியா யுண்டாயிருக்கிறபடியால் ஒன்று மற்றொன்றின் தொழிலைச் செய்யமாட்டாது. பிராணுதி வாயுக்களைந்தும் அப்பூதங்களின் மாத்திரைக ளொன்ருகக் கூடியிருக்கின்றமையால் கர்மேந்திரிய மைந்தினிடமாகவுஞ் சென்று அவற்றி னைந்துதொழில்களையுஞ் செய்விக்கும். இவ்வாயுக்களைந்தும் கர்மேந்திரியங்களைந்தும் ஆகிய பத்தும் ரஜோம்சமானபடியினலே கிரியாசாதனமாயின. இந்த இருபது தத்துவமும் சூக்ஷ்ம தேகமென்று சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்ம தேகத்தை மாயப்பிரதி விம்பனகிய ஈச்சுவரன் அவித்தியா பிரதிவிம்பராகிய உயிர்கள் அநேகராகையால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சரீரமாகச் சிருஷ்டித்து அளித்தார். இப்படி பஞ்சபூதத்தி னுடைய சத்துவாம்சமும் ரஜோம்சமுங் கழிந்து தமோம்ச நிற்கின்றது. இதுவே சூக்ஷ்மசரீர கற்பனையாம்.

இப்படிச் சேஷித்துநின்ற தமோம்சமான ஸூக்ஷ்ம பஞ்சபூதத்தினிடத்தில் ஸ்தூலபூதங்களும், ஸ்தூலதேகங்களுந் தோன்றும். எப்படியென்ருல்:—தமோம்சமாயிருக்கின்ற இந்த ஐந்துபூதங்களும் ஒவ்வொன்று இரண்டாகி முதற்பாதி யைந்தும் ஒவ்வொன்று நான்காகி இரண்டாம்பாதி யைந்தில் தன்னம்சம்விட்டு, மற்ற நான்குபூதத்தி னுடனும் அரைக்கால் மாத்திரையாகச்சேர்ந்து, பஞ்சீகரணமாயின. இப்பஞ்சீகரணமான தூலபூதங்களுள், ஆகாசத்திலே பரிசரூப ரசகந்தமான நான்குகுணமும் வியாப்பியமானபடியினலே அதிருசியமாய் நிற்க, நிஜகுணமாகிய சப்தம் திருசியமாய்த்தோன்றிநிற்கும். வாயுவிலே ரூபரசகந்தமாகிய மூன்றுகுணமும் வியாப்பியமானபடியினலே அதிருசியமாய்நிற்க, காரணகுணமாகிய சப்தமும் நிஜகுணமாகிய ஸ்பரிசமும் திரிசியமாகத்தோன்றிநிற்கும். அக்கினியிலே ரசகந்தமாகிய இரண்டு குணமும் வியாப்பியமான படியினலே அதிருசியமாய் நிற்கக் காரணகுணங்களாகிய சப்த ஸ்பரிசமும் நிஜகுணமாகிய ரூபமுந் திருசியமாய்த் தோன்றிநிற்கும். அப்புவிலே கந்தகுணம் வியாப்பியமானபடியினலே அதிருசியமாய் நிற்கக் காரணகுணங்களாகிய சப்தஸ்பரிசரூபமும் நிஜகுணமாகிய யாகாசமுந் திருசியமாய்த் தோன்றி நிற்கும். பிருதுவியிலே காரணகுணங்களாகிய சப்தஸ்பரிசரூபரசமும் நிஜகுணமாகிய கந்தமும் திருசியமாகத் தோன்றிநிற்கும் ஸூக்ஷ்ம பூதத்திலிருந்து ஸூக்ஷ்மசரீரந் தோன்றினதுபோல பஞ்சீகரித்த ஸ்தூலபூதத்தினின்றும் ஆறுதத்துவமாய் நால்வகைத்தோற்றமாய் மூவகைஜாதியாய் ஸ்தூலசரீரங்கள் தோன்றின.

ஆறுதத்துவங்களாவன:—சர்மம், உதிரம், மாம்சம், நரம்பு, அஸ்தி, மச்சை இவைகளாம். நால்வகைத்தோற்றங்களாவன :-சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம் இவைகளாம். மூவகைச்சாதிகளாவன:—இகலோகபுத்தி, பரலோகபுத்தியென்னு மிரண்டையுமுடைய மனிதர்கள் உத்தம ஜாதி, பரலோக புத்தியின்றி இகலோகபுத்திமாத்திரமுடைய பசுபக்ஷி முதலான திரியக்குகள் மத்திமஜாதி ; இவ்விருவகை புத்தியும் இல்லாதவைகளா யிருக்கின்ற விருக்ஷஜாதிகள் அதமஜாதிகள் இவைகளாம். பிருதுவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்திலே இந்த மூன்றுஜாதிகளுமிருக்கின்றனவைபோல அப்பு, அக்கினி, வாயு ஆகாச மென்னப்பட்ட தத்துவங்களாயிருக்கும் பிதிர்லோகம். தேவலோகம், காந்தர்வலோகம், சித்தலோகங்களிலேயு முண்டாயிருக்கின்றன ; அங்கே சந்திரன்முதலான பிதிர்கள், சூரியன் முதலான தேவர்கள், கந்தர்வர், சித்தர்முதலானவர்கள் உத்தமஜாதி, காமதேனு ஐராவதம், கருடன் இவைகள் மத்திமஜாதி, கற்பகவிருக்ஷ முதலான இவைகள் அதமஜாதி.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னு மைந்துகோசங்களில் இந்த ஸ்தூல தேகம் அன்னமய கோசமாம். சூட்சுமதேகம் பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம் என்னு மூன்றுகோசங்களாம் ; அவையாவன : பிராணவாயுவுங் கர்மேந்திரியமுங் கூடியது பிராணமயகோசம் ; மனதுங் கர்மேந்திரியமுங்கூடினது மனோமயகோசம் ; புத்தியும் ஞானேந்திரியமுங் கூடியது விஞ்ஞானமயகோசம் ; காரணதேக மானந்

தமயகோசமாம். ஆறுதத்துவமாயிருக்கிற ஸ்தூலதேகத்திலே சூக்ஷ்ம சரீரத்துவ மிருக்கின்றதெப்படியென்றால் கர்மேந்திரியத்தில் வாக்கும், ஞானேந்திரியத்தில் சிங்ஙுவையும், வாயிலிருக்கும். உதானவாயு மனதுங் கண்டத்திமேலயிருக்கும். பிராணவாயும் புத்தியும் இருதயத்திலிருக்கும். சமானவாயும் சித்தமும் நாபியிலிருக்கும். அபானவாயும் பாயுரும் குதத்திலிருக்கும். வியானவாயும், ஞானேந்திரியத்திலே துவக்கும், அகங்காரமும், சர்வாங்கம் வியாபித்திருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழிநுனியிலே சட்சிந்திரியமும், காதுக்குள்ளே சுரேத்திரேந்திரியமும், மூக்கு நுனியிலே கிராணேந்திரியமும் ஆகிய இவைகள் கண்டத்திற்குமேலே தனித்தனியே யிருக்கும். கண்டத்திற்குக் கீழே கை, கால், குய்யங்களில் பாணி, பாதம், உபஸ்தமென்னு மிந்திரியங்கள் தனித்தனியே யிருக்கும். இப்படி ஸ்தூல தேகத்துவம் ஆறும், அதிற்குடிபுகுந்த சூக்ஷ்ம தேகத்வ மிருபதும், ஆகிய தத்துவ மிருபத்தாறும், பஞ்சபூதத்தின் காரியமான்படியினாலே இவைகளினாலாகிய ஸ்தூலசூக்ஷ்மதேகங்கள், காரிய தேகமென்று சொல்லப்படும். அவித்தையிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் ஜாக்கிரத்திலே இந்த இருபத்தாறு தத்துவத்துடனே கலந்து நின்றபோது, விஸ்வனென்றும், வியவகாரிக ஜீவனென்றும், சொல்லப்படும். ஸ்தூல தேகத்தைவிட்டுச் சொப்பனத்திலே அந்தக்கரணத்துடனே கூடிநின்றபோது, தைசதனென்றும், பிரதிபாதிக ஜீவனென்றும், சொப்பன கற்பிதனென்றும் சொல்லப்படும். சுழுத்தியிலே காரிய தேகத்வ மிருந்ததையும் விட்டு, காரண தேகத்தைமாத்திரம் பொருந்தியிருக்கும்போது பிராஞ்ஞனென்றும், பாரமார்த்திக ஜீவனென்றும் சொல்லப்படும். பிர்ம சைதன்னியம் ஜாக்கிரத்துக்கு சாக்ஷியாயிருக்கும்போது, ஜீவாத்துமாவென்றும், சொப்பனத்துக்கு சாக்ஷியாயிருக்கும்போது, அந்தராத்மாவென்றும், சுழுப்திக்கு சாக்ஷியா யிருக்கும்போது, பரமாத்துமா வென்றும், அவஸ்தாத்திரய சாக்ஷியா யிருக்கும்போது, ஞானாத்மா வென்றும் கூடஸ்தனென்றும் சொல்லப்படும். ஜீவனுக்கு மூன்றவஸ்தையும் மூன்று தேகமுஞ் சொல்லப்பட்டன.

கற்பித பிரபஞ்ச வடிவமாகத் தோன்றுகின்ற ஸ்தூலபஞ்சபூதங்களும், அப்பூதங்களிலேதோன்றி மூன்றுஜாதியாயிருக்கிற ஸ்தூலதேகசமஷ்டியும், ஈச்சுவரன் ஸ்தூலதேகமென்றும், விராட்டென்றுஞ் சொல்லப்படும். இவற்றுடனே கூடி ஜாக்கிராவஸ்தையைப் பொருந்துகின்ற ஈச்சுவரன், வைஸ்வாநரனென்றும், இவற்றிற்கு அதிஷ்டான சைதன்னியம் பிர்மனென்றுஞ் சொல்லப்படும். சூக்ஷ்மபூதங்களைந்தும், அப்பூதங்களிலே தோன்றின சூக்ஷ்மதேக சமஷ்டியும், ஈச்சுவரன் சூக்ஷ்மதேகமென்றும், இரண்ய கெர்ப்பனென்றுஞ் சொல்லப்படும். இவற்றுடனே கூடி சொப்பனாவஸ்தையைப் பொருந்துகின்ற ஈச்சுவரன், சூத்திராத்மாவென்றும், இவற்றிற்கு அதிஷ்டான சைதன்னியம் விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படும். இந்த ஸ்தூலசூக்ஷ்ம மிரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை, ஈச்சுரகாரண தேகமென்றும், அவ்வியாகிருதமென்றும் சொல்லப்படும். இதனுடனே கூடி சுழுத்தி யவஸ்தையைப் பொருந்துகின்ற ஈச்சுவரன், அந்தரியாமியென்றும், இவற்றிற்கு அதிஷ்டான சைதன்னியம் ருத்திரனென்றுஞ் சொல்லப்படும். இவையே, ஈஸ்வரனுக்கு மூன்றுதேகமும், மூன்றவஸ்தையுமாம்.

ஜீவன் தன் மூன்றவஸ்தையிலுந் தன்மூன்று தேகமாயிருக்கின்ற இருபத்தேழுதத்துவத்துடனும் நானென்று கலந்துநிற்பதுபோல, ஈச்சுவரனும் தன் மூன்றவஸ்தையிலும், தன் மூன்று தேகமாயிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவத்துடனும் கலந்து நிற்பன். ஆயினும் சிதாபாச சீவன், தன்தேகமாத்திரமே கலந்துநிற்பன். ஈச்சுவரன் தன்தேகமாகிய சகல தேகங்களோடுஞ் சகலப் பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பன். இவ்விரண்டிற்குஞ் சாக்ஷியாயிருக்கின்ற, பிர்ம சைதன்யம், சகல தேகத்திலும் சகல பிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலு மக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

ஜீவனுக்கு ஸ்தூலதேக விவகாரத்திற்குத்தத்துவங்கள்:—அன்னமய சட்கோசத்துவம் 6, சூக்ஷ்மதேகத்துவம் 20, ஜீவன், ஈச்சுவரன், அவித்தை, வித்தை, பிர்மம், ஆக 31-ம் ஆம். சூக்ஷ்மதேக விவகாரத்துக்குத் தத்துவங்கள்:—ஸூக்ஷ்மதேகத்துவம் 20, ஜீவன், ஈச்சுவரன், அவித்தை, வித்தை, பிர்மம், ஆக 25 ஆம், காரண தேகவிவகாரத்துக்குத் தத்துவங்கள்:—ஜீவன், ஈஸ்வரன், அவித்தை, வித்தை, பிர்மம், ஆக-5 ஆம். ஜீவவிவகாரத்திற்கு:—சீவன், ஈஸ்வரன், பிர்மம் ஆக 3 ஆம். சாட்சிவிவகாரத்திற்கு:—கூடஸ்தன் 1 ஆம். ஈச்சுவரனுக்கு ஸ்தூலதேக விவகாரத்திற்குத் தத்துவங்கள்:—சமஷ்டி அன்னமயகோசத்துவம் 6, சமஷ்டி ஸூக்ஷ்மதேகத்து

வம் 20, சமஷ்டி சீவன், அவித்தை 2, ஈச்சுவரன், வித்தை, பிர்மம் 3, ஸ்தூலபூதம் 5, ஆக 30 ஆம். ஸூக்ஷ்மதேகவிவகாரத்திற்குத் தத்துவங்கள்:—ஈச்சுவரன், வித்தை, பிர்மம், ஆக 3 ஆம். ஈச்சுவர விவகாரத்திற்கு:— ஈச்சுவரன், பிர்மம், ஆக 2 ஆம். பிர்மவிவகாரத்திற்குப் பிர்மம் 1 ஆம். இந்திரிய விவகாரத்துக்குத் தத்துவங்கள்:—இந்திரியம் 1, சட்கோசத்வம் 6, அந்தக்கரணம் 5, வாயு 5, சீவன், ஈச்சுவரன், அவித்தை, வித்தை, பிர்மம் 5, ஆக 22-ஆம். மனோராஜ்ஜிய விவகாரத்திற்குத் தத்துவங்கள்:—அந்தக்கரணம் 5, ஜீவன், ஈச்சுவர்ன், அவித்தை, வித்தை, பிர்மம், ஆக 10 ஆம். இவைகளே தத்துவங்களினுடைய தோற்றமும் நிலேயும், தத்துவங்க ளொடுங்கும் வழியும் நாஞசீவவாத கட்டளேயிற்காண்க.

நாம் இதனல் தேர்ந்தது யாதெனின், கோசரமாகிய பிரபஞ்சத்தினின்றும் அகோசரமாகிய பிர்மமொன்றுளவென்பதாம். அப்பிர்மம் காரணமாகுங்கால், இப்பிரபஞ்சம் காரியமே யாகுன்ரு? நூல் வஸ்திரத்துக்குக் காரணமாயினும், பஞ்சினேநோக்குழி யந்நூல்காரியப்படுமாகலின், இத்தன்மைத்துந் தனிக்காரண மாகமாட்டா ஆகலின், பிர்மமொன்றே தனிக்காரணமும் நித்தியமும் என்னப்படும். ஜெகத்தனைத்தும் அநித்யமென்பதே அத்துவித சித்தாந்தம். அத்துவைத மென்பது இரண்டற்றது, அல்லது அபேதம். இதன் கருத்து சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றென்பதே. துவைதமென்பது, இரண்டு. இதன் கருத்து சீவாத்மாவும், பரமாத்மாவும், வேறுவேறு என்பதே. விசிஷ்டாத்வைதம் என்பது, கூடியிருப்பது, அதன் அபேதம். இதன் கருத்து சொரூபத்தில் வேருனலும், பிரியாமலிருப்பதை நோக்கி, ஒன்றென்பதே. இவைகளே நமது புராதன சாஸ்திரங்களிற் சித்தாந்தஞ் செய்திருக்கு மூன்றுமதங்கள். அல்லாமலும் உபாசிக்கப்படும் தேவதைகளைப் பற்றி காபிலம், பாதஞ்சலம், காணதம், கௌதமம், பாஞ்சராத்திரம், சைவம் என ஆறு மதங்களாம். அன்றியும் வேறு ஆறுவிதமாய் சாங்கரம், பாஸ்கரம், யாதவம், பாட்டம், பிரபாகரம், வைஷ்ணவம் எனச் சொல்வது முண்டு. இவைகளே முற்று நோக்கின் முன்குறித்த மூன்று மதங்களிலேயடங்கும். மேற்கூறிப்போந்த ஷண்மதங்களும் அவ்வவ்வதிகாரிகளுக்கேற்ப மஹான்களால் ஸ்தாபிக்கப்பட்டிருப்பவைகளாகலின், அனைத்து ,மவ்வவ் வதிகாரிகளுக் கியைந்த பதமுக்திகளை யளித்து, அநந்த ஜன்மங்களிலேனும் நிரதிசயானந்தத்தைத் துய்ப்பிக்கும் என்பதும் நிஸ்ஸந்தேகமேயாம்.

இதுகள் தவிர, இக்காலத்திய கிறிஸ்திய, மகம்மதீய, நாஸ்தீக மதங்களுக்கொப்பன அக்காலத்தும், சமணம், புத்தம், உலகாயுதமாதிய புறச்சமயங்களும் அபிவிர்த்தித்துக்கொண்டிருந்தன; அவைகளெல்லாம் அக்காலத்திற்றனே நமது முன்னோர்களால் கண்டனஞ் செய்யப்பட்டும், கலிகால விசேஷத்தால், ஆங்காங்கு முளைத்துக் கொண்டே வருகின்றன: "தீமையும் நன்மை பயக்கும்" என்னும் வாக்கியத்திற்கிணங்க, ஒவ்வொன்றினிடத்தும் ஒவ்வொருவித பிரயோசனமுளவாகுமென்பதே ஆன்ருேர்கருத்து; ஆகலின் "எம்மதத்தராயினுமெமக்குச்சம்மதமே" யென்னும் வாக்கியம் வெளிப்பட்டது காண்க. இதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு, ஒருவன் தன்து சுயமதத்தின் சிற்சில நிபந்தனைகளை நிராகரித்தற் குத்தேசித்து, வேறுமதம்புகுதல், உள்ளங்கையிலிருக்கு மமுதத்தினைப்பருகாது, புறங்கையினை நக்குவான்போலுமன்றி வேறென்னை?

இதரமதவாதிகளிட்ஞ் செய்யுந்தர்க்கம் விர்தா கண்ட சோஷணை விளைக்குமாகையால், நாம் விடாமுயற்சியுடன் நமது மதசாஸ்திரங்களினுந்த ரார்த்தங்களை, நிஜபக்திபூர்வகமாய், சற்குருமுகேன, ஐயந்திரிபறவுணர்ந்து, இஷ்டாள்களுக்கு இதோபதேசித்தலும், கற்றநன்னெறி வழியொழுகுதலுமே யுசிதமென்பது எனது சித்தாந்தம்: இதற்கிணங்கியே நாயனரும் "கற்கக்கசடறக் கற்பவை கற்றபி, னிற்க வதற்குத்தக" எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

மேலும் இந்துமதத்தர்களாகிய நாமனைவரும் சைவ வைஷ்ணவரென்னு மிருவகுப்பினையுடையோரா யிருப்பதினுலே, நமக்குள் மதவைராக்கியம் ஜெனியாதிருக்கும்பொருட்டு, நமது மதங்களி னதிஷ்டான தேவதைகளாகிய இருமூகூர்த்தங்களும் ஒன்றேயாமென மேற்குசிப்பித்திருத்தலால், அப்பரப்பிர்மமே முத்தொழிலும் நனியாற்றுமாறு, திரிமூர்த்தி சொரூபங்களாக நின்று தம்மைவழிபடு மடியர்கட்கு அநுக்கிரகஞ்செய்யும் விதங்களையு மற்றும், அடுத்தபிரசங்கத்தில் எனதுசிற்றறிவிற் புலப்படுங்காறுங்கூறலாகு மெனினும், அவ்விஷயமா யென்னு லியற்றப்பட்ட ஒருசெய்யுளினை யீங்குபிரஸ்தாபித்து, இப்பிரசங்கத்தினை முடிப்பேனுக.

அச்செய்யுளாவது:—

கீர்த்தனம்—இ-ம். நாதநாமக்கிரியை ரூபகதாளம்.

பல்லவி.

ஹரியரன் வேறு - எனக்கொள்ளல் - ஆகாது தேறு.

அநுபல்லவி.

உருவங் குணங்குறி யொன்றிடாத பிர்மத் - தோங்கார நாதத்து ளொளிரும் பராபரை
மருவவ் வியக்தமதில் வந்த முதற்குணம் - மாலயு னரனென வமுத்திடுமே மறை. (ஹரி)

சரணங்கள்.

க. ஆதி யோங்காரமா மக்ஷர மூன்றுகி - அகிலசிருஷ்டி ஸ்திதி லயகாரணமாகி
ஓதும்பஞ்சாக்ஷர வஷ்டாக்ஷரமு மாகி-ஒடுங்குங் காலத்தினி லொப்பில் மெய்ப்பொருளாகும்
ஒன்றதே நித்தியம் - முப்பொருளாய்
நின்ற தனித்தியம் - இவற்றின்சூக்ஷ்ம
நீதி பக்தி வைராக்கிய வழியூடேகி - நிமல யோகஞான நிஷ்டா நுபூதியாம்
சாதன நான்கையுஞ் சாதித்து மாவாக்கிய - தத்பத துவம்பத சோதனையானதைச்
சற்குரு முன்னே - செயச்செய
வற்புத நின்னே - வந்துவந்து
மோது நானெனதென்னு மூலாஞ்ஞானம் போகும்
பேததிருஷ்டி கெடப் பிர்மமே வெளி யாகும். (ஹரி)

உ. திரிகால சந்தியா வந்தனஞ் செய்போது - சீத மதிச்சடை நாதன் விஷ்ணுரூபம்
முரளிகான லோலன் சிவரூப மாமென - மொழிவது மாத்திரமோ வழகியபுராணமு
முறையிடல் கேளு - பாகவதத்
திறையே யெங்காளு - மிப்புவியில்
அரியைப்பூசித்துநல் லரனைத்துவேஷிப்போரும்-அரனைப்பூஜித்துமுர ஹரியைத்தியஜிப்போரும்
இருதிறவரு மெரிவாய் நரகிற்காளாய் - இலகுங் கதிர்மதிக ளொழுங்கால வளாயினும்
இருப்பர்கள் திண்ணம் - எனச்சொன்ன
விருப்பமென் னெண்ணம் - பஞ்சமவேதத்
திருடி துதிக்குமீச னிமைய மகட்கு மெல்ல
என்னுள் ளரியுமன்றேன் றன்னுள்யா னெனச்சொல்ல. (ஹரி)

[சான்றோர்
ங. பொன்னென்று பணிபல மண்ணென்று கடம்பல - போந்தவாறீ போன்றே யாய்ந்துணர்ந்த
தன்னறிவ தொன்றே பின்னபின்னமாகி - ஜகஜீவபரமெனத் தழைக்குமுப் பொருளாகச்
சாற்றிடு மாற்றம் - உணர்ந்தோரைச்
சிற்றுமோ கூற்றம் - இன்னிலையெய்தும்
அன்னகாறுஞ் சிசு வன்னை தந்தையின்றி - ஆகா தாகாதென ஞகாபரணன் பொன்னுயப்
பன்னகா சயனனே பணியெனவே மதித்து - பாரபக்ஷ மின்றி யேகரூபமாகப்
பார்ப்பதே நேர்த்தி - மறைநான்கு
மார்ப்பதிச் சீர்த்தி - தனைமறந்து
துன்னுங் கானற்சலத் தோற்றமெய் யென நம்பி
துவைத பாவமறு தொடர்க்குட் பட்டு வெம்பி. (ஹரி)

ஓம் தத்ஸத்.

ஹரி: ஓம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# அத்துவைத மதவிரோத விளக்கம்.

## கடவுள் வணக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அகரமுத லாகவின் றுயிர்க்குயிராய் மெய்யெழுத்தி லமர்தற்போலச்
சகமியலுஞ் சராசரங்கட் குள்ளுமாய்ப் புறம்பெங்குஞ் சார்ந்துதங்கி
இகபரமு நீங்காம லெப்பொருட்குஞ் சத்தாகி யிலங்குமந்தத்
தகுபொருளாம் பராபரத்தின் மேலானச் சுடரடிக டலைமேற்கொள்வாம். (க)

வேறு.

பொருளென்ப தெவைக்குமுதற் பொருளாஞான
பூரணமாய்க் காரணமாய்ப் புனிதமாகி
அருள்வடிவாய் மருளகற்று மருமருந்தா
யானந்தக்கடலாகி யகண்ட மாகிக்
குருவடிவாய்த் தாய்தந்தைத் தமருமாகிக்
குணோததியா யின்னதெனக் குறித்தற்கொண்ணு
ஒருவடிவில் மூன்றுருவா யொளிருஞ்சோதி
யொன்றுன பரம்பொருளை யூன்றிநிற்பாம். (உ)

அருமறையின் சிரப்பொருளா யனுதியாக
வனைத்தினுக்கு மாதாராதேயமாகிப்
பெருமைபெறும் பேரின்ப மளிக்குமுத்திப்
பேறுகிப் பேரமுத வாரியாகி
மருவுகின்ற மதங்தோறும் வேறுவேறாய்
மன்னியவர் வழிபடுமத் தேவாயெங்கும்
பிரிவறவின்பக் கடலாய்ப் பிறங்குமந்தப்
பெரியபொரு ளியாததனைப் பேணிவாழ்வாம். (ந)

அருள்வெளியி லண்டகோ டிகளையெல்லா
மமைத்தவைக ளழியாம லளித்துநோக்கும்
பெருவெளியாய் விபுவாகிப் பிரமமென்னும்
பேர்பெற்று விளங்குபெருந் தகையுமாகித்
துரியமா யதீதமாய் வத்துவாகித்
தோன்றுமிவ் வுலகிற்குத் தூயதாகி
யுருவமெலாந் தானெனவே யொன்றிநிற்கு
மோங்காரப் பொருளையுயிர்த் துணையாய்க்கொள்வாம். (ச)

ஆதியந்த மற்றதா யாணும் பெண்ணு
மலியுமின்றி மனோவாக்கிற் கதீதமாகி
நீதிபெரும் புணரியாய் நெஞ்சினுள்ளே
நினைப்பவனைக் கைவிடா நேயமாகிப்
போதில்வரு பிரமன்முதல் தேவர்தம்மைப்
புவியுலகந் தோற்றுவித்துப் புரந்தடக்கித்
திதில்பெரு நாடகத்தைச் செய்துவக்குந்
தேவனடி மலர்பணிந்து தேறுவோமால். (ரு)

ஓய் உத்தமரென்பவரே! இந்த இழிவிலே மாதனை "மறலி விடுக்க வந்த தூத" ரென்றும் "சிறுமினைபது பெண்ணுரு" வென்றும் "பாழாம் நரகக் குழிச்சிவ ரெல்லாம் பரத்தைபராய் வாழ்வானமைந்தனை வஞ்சிக்கொடுசெல வந்தனரே" என்றும் இப்படி யனேகமாய்ப் பெரியோர்கள் அறுதியிட்டிருக்கிறார்கள். ஆகலால் இந்த மாதர்கள் அந்த யமனுடைய நகரத்தி லிருக்கின்ற அநேககோடி நரகபாதாளங்களில் நித்தியவாசம்பண்ணப்பட்ட பூதபைசாச ராக்ஷஸாதி பேதவர்க்கங்களும்; சிம்மசார்த்தூல, சரப, கரடி, நரி, நாய்முதலான கோரமான மிருகங்களும்; கழுக்கள், பருந்துகள், கூளிகள், வல்லூறுகள், டேகைகள், ராஜாளிகள், காக்கைகள், கண்டபேரண்டங்கள் முதலான உக்கிரமான பக்ஷிஜாலங்களும்; பாம்பு, தேள், வண்டு, கிருமி, கிடாதி, புழு, பூச்சி, சிற்றெறும்பு, கட்டெறும்பு, செங்குளவி, கருங்குளவி முதலானவைகளும்; சகலரோக சமூகங்கள், சமஸ்த பாபரூபங்கள், மற்ற நரகங்கள், மாயாசக்தி கூட்டங்களுங்கூடி இந்த லீலாவிபூதி எப்போதும் பிழைத்திருக்கவும், அந்த முக்தி வீடான நித்தியவிபூதி பாழாகவும் வேண்டி இவ்வுலகத்தில் தாசிகளாகப் பிறந்திருக்கிறார்கள்; இதிற் சம்ஸயமில்லை. அப்படிப் பிறந்து, அறிவில்லாத பொருளுள்ளபுருஷர்களை யெல்லாம் மயக்கித் தாங்களிருக்குந் தலங்களுக்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு பிடுங்கிப் பிடுங்கி யுண்டு நித்தியமாக வாழ்ந்திருக்கலாமென்று, திவ்வியாதிசுந்தராங்க லாவண்ணிய மநுஷ்யரூபத்தோடு கூடினவராய் வந்ததற்கு, அநுகுணமாக பாவ ராக தாள பரத விநோத கீத நடன நாடகபேதாஞ்சித சிருங்கார சம்பிரம வுல்லாச கம்பீரராய், சந்தன பாடீர குங்கும தாம்பூல வஸ்திராபரணாதி சர்வாலங்கார பூஷிதராய், லட்டு திக்ஷீராதி சித்திரான்னபோஜநராய், அதிமதன காமவிகாராவேச லேஹியாதி லாகிரி மத்தபித்தராய், மதுபான சூது முதலான லீலா லோப கரண கரவட்டவிடராய், யாவரும் மயங்கும்படியான வேஷதாரிகளாய் இருக்கிறார்கள். முந்நாளில் சூர்ப்பநகையும், இன்னம் சில பசாசுகளும், அரக்கிகளும், சக்கிரவர்த்தித் திருமகனையும், கண்ணபிரானையும், சிலமனிதர்களையும் வளைத்துக்கொண்டு மோகித்ததுபோ லிவர்களும் தேவசக்கிரவர்த்தியான பரப்பிரம்மத்தின் புத்திரவர்க்கங்களை வஞ்சித்துத் தாங்கள் நித்தியவாஸம் பண்ணும்படியான நிரவதிக துக்கமுள்ள நரகத்தில் கொடுபோய் தங்கள்வசப்பட்டவர்களையும் வைத்துக்கொண்டுப் பிடுங்கித்தின்பார்களாக்கும்; இந்த வேசிகளென் றுணரக் கடவீர். இதற்குச் சாக்ஷியவர்கள் பாவச்செய்கையும், உலகத்திலிழிந்தசண்டாளர்களும், ஒருவர்க்கொருவர் அடா வேசிமகனே யென்று வைதால் அவ்வளவு குறைவு வந்ததாக விவகரித்துக் கொள்ளுகிறார்களதுவே பாரும். தாங்கள் கேட்டபடி கொடுத்த புருஷர்களுக்காவது தகுதியாகத் தங்கள்சுகத்தைக்கொடுப்பார்களா? அதுவுமின்றே! வந்தவனுடையபோக முந்திடத்தக்க கிருத்தியஞ் செய்து இவனை யவமானப்படுத்த நகைப்பார்களே, அப்போதேனு மிப்புருஷர்களுக்கு நாணமுண்டா? அந்தோ!

இப்படிப்பட்ட வேசிகளுக்கும், இவர்களுக்குச் சேஷப்பட்டவர்களுக்கும் நற்குணநற்செய்கைகளுண்டாகி நற்கதியடைய மாட்டார்களாவென்பீராயின், இவர் மோக்ஷமுறுங்காலத்தில் சுரையாழ, அம்மி மிதக்க, ஆமை பறக்க, பனைவளைய, மலடிமக வீன, மதிகதிராக, யாரேனும் பார்த்திருக்க வேண்டும். அஃதில்லாமையினால் இப்பரத்தைபர்க்கும் இவர்களோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் நற்கதியுண்டாக மாட்டாது என்றுணரவேண்டியது. ஏனென்றால், சுபாவங்கெடுவதில்லை ஆனால் கண்டகி, தேவதேவி முதலான உத்தம தாஸிகள் மகத்தான பகவத்கடாக்ஷ பாத்திரர்களாய் இருக்கிறார்களே யென்பீராயின், அஃதெவ்வாறென்றால், கல்லைப் பெண்ணாக்கவும், அல்லை பகலாக்கவும், பகலை யல்லாக்கவும், மலையை மிதக்கவும், அலையை யடக்கவும், விஷத்தை யமுதாக்கவும், நெருப்பை நீராக்கவும் வல்ல அகடிதகடனா சாமார்த்தியமுள்ள சர்வதந்திர சுதந்தர சர்வஸ்மாத்பரனான எம்பெருமானுடைய நிர்ஹேதுகஜாயமான கடாக்ஷவிசேஷமுண்டானால், அளவிலாத அசுரராக்ஷச வெள்ளங்களில் பிரகலாத விபீஷணர்கள் சர்வநீதி நியந்தாவான எமது ஸர்வேஸ்வரன்திருவடிகளுக்கே திர்த்தடிமைப்புக்கதுபோல், தயாகுணத்தால் அஞ்ஞான அகிரமுண்டாக்கி "நரகமே சுவர்க்கமாகு நாமங்களுடைய நம்பி" என்று தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச்செய்த திருமுகப்படி யாரேனுமொருவர் ஆகஸ்மிகஜாயமான கடாக்ஷத்திற் கிலக்கானால் அவர்கள் மோக்ஷமடையத் தடையின்றென் றுணரக் கடவீர். அது பட்டத்து யானையானது பார்த்தெடுக்கும் பார்த்திபனையும் வல்லான்வகுத்த வாய்க்காலுக்கு வழக்கில்லாத ஞாயத்தையும் ஒத்திருக்குமென் றுணரவேண்டியது.

(வரும்)